6th March 1964]

கரும்பின் விலை நிர்ணயம்.

*165 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பல்வேறு கரும்பாலைகளுக்கும் 1962-63 சீசனில் சப்ளை செய்த கரும்புக்கு முடிவான விலை நிர்ண யிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) இல்லையெனில், 1963-64 சீசனுக்கு நிர்ணயிக்கப்பட்ட படி 1962-63 சீசனுக்கும் கரும்புக்கு முடிவான விலை நிர்ணயிக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*166 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the reasons for issuing orders under D.I.R. compelling sugarcane growers in Lalgudi, Udayarpalayam and Perambalur taluks in Tiruchirappalli district, to sell sugarcane only to Kothari Sugars and Chemicals, Limited, Kathur;

(b) whether the price has been fixed; and

(c) the period for which these orders will be in force?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சர்க்கரை உற்பத்திக் குறியளவை அடைய, இம் மாநிலச் சர்க்கரை ஆலைகளுக்கு 1963-64-ல் போதிய அளவில் கரும்பு சப்ளை செய்வதற்காக அரசாங்கம் அந்தந்தச் சர்க்கரை ஆலைகளிலிருந்து 30 மைல் சுற்றளவிலுள்ள கரும்பு விளையும் பகுதிகளை இந்தியப் பாதுகாப்பு விதிகளின்படி, ஒதுக்கி வைக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது.

(இ) ஆம். காட்டூரில் இருக்கும் கோத்தாரி ஷுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆலைக்கு 1963-64 கரும்புப் பருவத்தில் ஒரு குவின்டல் ரூ. 4.89 வீதம் கரும்பிற்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(உ) இந்தியப் பாதுகாப்பு விதிகளின்படி அந்த ஆலைக்கு 1963-ம் வருஷம் ஜுலை மாதம் 1-ம் தேதி முதல் 1964-ம் வருஷம் ஜுன் மாதம் 30-ம் தேதி வரையுள்ள காலத்தில் கரும்பு விளையும் பகுதிகள் ஒதுக்கித் தரப்பட்டுள்ளன.

திரு. சா. ராமசாமி : அமைச்சர் அவர்கள் காட்டூர் சர்க்கரை ஆலைக்குத்தான் கரும்பை அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள். முப்பது மைல் சுற்றளவுக்கு அந்த பாக்டரியைச் சுற்றிப் பயிரிடப் படுகிறது. மொத்த உற்பத்தி 27 ஆயிரம் டன்னுக்கு மேல் இருக் கிறது. ஆலையின் கபாஸிடி 17 ஆயிரம் டன்தான். ஆகவே பாக்கி யுள்ள கரும்பை அவர்களும் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே சர்க்கரை ஆலைக்குத் தேவையானது போக பாக்கியை நல்ல முறையில் வேறுவகையில் பயன்படுத்த ஒரு திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.